**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 97/2020 |
| Name | : Loganathan |
| P.W. | : 1 |
| Father Name | : Venkatramaraju |
| Village | : Gudimangalam. |
| Taluk | : Madathukulam |
| Caste | : — |
| Calling | : Health Inspector |
| Religion | : Indian / Hindu |
| Age | : 43 /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.09.2024

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது குடிமங்கலம் வட்டார சுகாதார அலுவலராக பணிபுரிந்து வருகறேன். கடந்த 19.11.2018 ம் தேதி மடத்துக்குளம் பகுதி உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்த போது கணியூர் பகுதியில் முருகானந்தம் என்பவர் தனது வீட்டில் டீ துளை விற்பனை செய்தது சம்மந்தமாக ஆய்வு செய்து கடந்த 19.11.2018 அன்று காலை 11.30 மணியளவில் கணியூர், ராமலிங்கம்பிள்ளை தெருவில், கதவிலக்கம் 69 என்ற எண்ணில், பொதுமக்களின் உணவு உபயோகத்திற்காக

உணவுப்பொருட்களை விற்பனை **செய்வதற்காக** இருப்பு வைத்திருந்த வளாகத்திற்கு மாவட்ட நியமன **அலுவலர்** தலைமையில் உணவுபாதுகாப்பு அலுவலர்கள் கொண்ட **குழு**மூலம் ஆய்விற்காக சென்று அங்கு, பொதுமக்களுக்களின் உணவு உபயோகத்திற்காக உணவுப்பொருட்களை இருப்பு வைத்திருந்த நபரிடம் என்னை அறிமுகம் **செய்து** கொண்டு,அவரை விசாரித்ததில் தனது பெயர் திரு.V.முருகானந்தம் த/பெ.வெங்கடாசலம் (வயது 46/ஆண்) எனவும், தான் மேற்கண்ட வளாகத்திற்கு உரிமையாளராகவும், உணவுப்பொருட்களுக்கு விற்பனையாளராகவும் உள்ளேன் எனவும், மேற்கண்ட நிறுவனத்திற்கு பங்குதாரர்/நியமனதாரர் எனயாரும் இல்லை என்றும் தெரிவித்தார். உணவு பாதுகாப்பு **மற்றும்** தரங்கள் சட்டம் 2006-இன் கீழ் உரிமம்பெறவில்லை எனவும், வணிகத்தின் வருட விற்று கொள்முதல் 12 இலட்சங்களுக்கு அதிகமாகவும், நடைபெறுகிறது என்றும் தெரிவித்துள்ளார். பின்னர்மேற்கண்ட வளாகத்தினை ஆய்வுசெய்து அங்கு பொதுமக்களுக்கு உணவாக விற்பனை செய்தது போக மீதி **வைத்திருந்த** லேபிள் விளக்ககுறிப்புகள் இல்லாமல் **"டீத்**தூள்" 25 கிலோகிராம் அளவு உதிரியாக காணப்பட்டது. **அவ்வகை** உணவானது, உணவு பாதுகாப்பு **மற்றும்** தரங்கள் சட்டம், 2006 விதிகள் 2011-க்கு புறம்பாக இருக்கலாம் என சந்தேகித்து, அதனை உறுதிபடுத்த, மேற்கண்ட உணவுப்பொருளை (500 கிராம்அளவில்) 4 **உணவு** மாதிரிகளாக எடுக்க **முடிவு** செய்து **அந்த** உணவுப்பாக்கெட்டுகளை உள்ளது உள்ளபடி, **நான்கு** பொட்டலமாக உணவுமாதிரியாக எடுத்து பகுப்பாய்விற்கு மதுரை உணவுபகுப்பாய்வகத்திற்கு அனுப்ப இருப்பதாக **கூறினேன்**. அதற்கு அவரும் ஒப்புக்கொண்டுள்ளார். அப்போது அங்கிருந்த நபரை இந்நிகழ்விற்கு பொதுசாட்சியாக அழைத்தபோது, **அதற்கு** அவரும் **சம்மதித்து**, தனது பெயர் திரு.வீரப்பன்,

..னியூர் என்ற முகவரியில் வசிப்பதாகவும் தெரிவித்து ஆரம்பம் முதல் **இறுதி** வரை உடனிருந்தார். பின்னர்படிவம் V–A இரண்டு தயார் செய்து அதில் திரு.V.முருகானந்தம் த/பெ.வெங்கடாசலம் (வயது /ஆண்) என **பெயர்**, முகவரி **மற்றும்** உணவுமாதிரி **"டீத்தூள்"** (TEA DUST) 500 கிராம்அளவு பாக்கெட்கள் என எழுதி உணவுமாதிரி எடுக்க இருப்பதாக தெரிவித்தேன். படிவம் V–A–ல்விற்பனையாளரிடமும், சாட்சியிடமும் கையொப்பம்பெற்று, அதன் ஒருபிரதியை விற்பனையாளருக்கு சார்பு **செய்தேன்**. உணவு மாதிரி எடுக்க அவர் சம்மதிக்கவே, சட்டவிதிகளின்படி, மேற்கண்டஉணவுபொருளை **ரூ**.360/– (எழுத்தால் முந்நூற்றி அறுபது மட்டும்) கிரையமாக செலுத்தி அதற்கான ரொக்க ரசீதில் **விற்பனையாளரிடமும்**, **சாட்சியிடமும் கையொப்பம் பெற்றுக்** கொண்டேன். உணவுபாதுகாப்பு **மற்றும்** தரவிதிகள் 2011, விதி 2.4.1 (8)–கீழ் உணவு மாதிரி லேபிள்கள் 4 தயார் **செய்து அதில்** விற்பனையாளரிடம் **கையொப்பம்** பெற்று. பின்னர், விலைக்கு வாங்கிய 4 உணவுமாதிரிகளையும் ( 500கிராம் × 4 வீதம்) பழுப்பு நிற காகிதத்தால் ஒவ்வொன்றையும் தனித்தனியாக **சுற்றிக்**கட்டினேன். பின்னர் **தயார் செய்த** 4 உணவு மாதிரி லேபிள்களை ஒவ்வொரு உணவுமாதிரி பாக்கெட்டின் மீதும் ஒட்டி. பின்னர், நன்கு முறுக்கேற்றப்பட்ட **நூலினால்** ஒவ்வொரு உணவுமாதிரி பாக்கெட்டினையும் **சுற்றிக்**கட்டி முடிச்சிட்டுள்ளார். பின்பு, லேபிள்கள் **நகராமல்** இருக்க அதன் **நான்கு**முனைகளிலும் எனது அலுவலக **அரக்கு** முத்திரை, பின்னர் காற்று வெளிச்சம் புகாமல் இருக்க மீண்டும் பழுப்பு நிற காகிதத்தால் ஒவ்வொரு உணவுமாதிரி பாக்கெட்டுகளையும் சுற்றி அதன்முனைகள் உட்புறமாக இருக்கும் வண்ணம் மடித்து ஒட்டி**னேன்**. பின்னர், நியமனஅலுவலர், திருப்பூர் மாவட்டம் அவர்களிடம்

பெற்றுக்கொண்ட 4 வெள்ளை நிறத்தாளினை (கோடு எண். 24/027/296/322/2018-19) ஒவ்வொரு உணவு மாதிரியிலும் தனித்தனியாக கீழிலிருந்து மேலாக ஒரு சுற்று முடியும் வரை பசை தடவி ஒட்டியுள்ளார். பின்பு, ஒவ்வொரு உணவுமாதிரியையும் தனித்தனியாக முறுக்கேற்றப்பட்ட நூலினால் கீழிலிருந்துமேலாகவும், பக்கவாட்டில் முறையாககட்டி உணவு மாதிரியின் மேல்பாகம், கீழ்பாகம், பக்கவாட்டிலும் **மற்றும்** முடிச்சின் மீதும் அரக்கினால் நன்கு சீலிட்டு எனது அடையாள முத்திரையை பதித்து ஒவ்வொரு சீலிட்ட உணவுமாதிரியிலும் பழுப்புநிறகாகிதத்திலும் பாதிபாதியாகபடும்படி தனித்தனியாக விற்பனையாளரிடம் கையொப்பம், தேதிப பெற்றேன். சீலிட்ட 4 உணவு மாதிரியினை I,II,III,IV என குறியீடு **செய்தேன்.** பின்னர் உணவு பாதுகாப்பு **மற்றும்** தரவிதிகள் 2011, விதி 2.4.1(10)(iii)-ன் கீழ் ஒரு உணவு மாதிரியை பகுப்பாய்வு**செய்வதற்காக** உணவுபாதுகாப்பு மற்றும்**தர** ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட NABL- ஆய்வகத்திற்கு அனுப்பவிருப்பமுள்ளதா? என்று வினவிய போது **மேற்கண்ட** விற்பனையாளர் தனக்கு **அனுப்ப**விருப்பமில்லை என்பதை தெரிவித்தார். பின்பு படிவம்VI ஆறு **பிரதிகள்** தயார்செய்து ஒவ்வொரு உணவுமாதிரி பாக்கெட்டுடனும் தனித்தனியாக படிவம் VI-ரின் இணைத்தேன். பின்னர் உணவுமாதிரிகளை சீல் செய்யபயன்படுத்திய அலுவலக மாதிரி முத்திரை நகல் 2 தயார்செய்தேன். பின்னர் சீலிட்டஒரு உணவு மாதிரியை மட்டும் (படிவம்VI வுடன்) **ஒரு** பையில் **இட்டு** மூடி சீல் செய்து. காலி உறையினுள்படிவம் VI மற்றும் **அலுவலக** மாதிரி முத்திரை நகல் ஆகியவற்றை வைத்து மூடிசீல் செய்து. அன்றைய தினமே மூடிசீல் செய்த உணவுமாதிரி பையினையும், படிவம் VI, மாதிரி முத்திரை நகல் **ஆகியவற்றை** தனித்தனியே உணவுபகுப்பாய்வாளர், மதுரை அவர்களுக்கு புரபொசனல்

கூரியர் மூலம் அனுப்பி ஒப்புகை பெற்றுகொண்டேன். பின்னர் மீதமிருந்த II, III, IV உணவுமாதிரிகளை, படிவம்VI–வுடன் ஒரு உறையில் இட்டு சீல் **செய்து அன்றைய** தினமே நியமன அலுவலர், திருப்பூர் அவர்களிடம் ஒப்படைத்து ஒப்புகைபெற்றேன். மேலும் **அன்றைய தினம்** என்னால் சேகரிக்கப்பட்ட உணவு மாதிரியின் விவரப்பட்டியலை நியமன **அலுவலரிடம்** சமர்பித்து கையொப்பம் பெற்றேன். இத்துடன் நான் பணி மாறுதலாகி உணவு பாதுகாப்பு அலுவலர் லியோ ஆண்ட்ரூஸ் என்பவரிடம் ஒப்படைத்துவிட்டு சென்றேன்.

இவ்வழக்கு தொடர்பான ஆவணங்கள்

ம.சா.ஆ.1.FSO Notification. ம.சா.ஆ.2. License ம.சா.ஆ.3. Cash Receipt & Vendor Statement. ம.சா.ஆ.4. Form V A ம.சா.ஆ.5. Form VI ம.சா.ஆ.6. Specimen Impression Seal ம.சா.ஆ.7. NABL right waived by the FBO ம.சா.ஆ.8. Sample sent to analyst proof ம.சா.ஆ.09. Intimation letter and Acknowledgement to D.O ஆகிய ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 வரையான ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.